**மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே,**

**வணக்கம்.**

தமிழ்நாட்டின் பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடரை இந்நன்னாளில் தொடங்கி வைத்து உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்கள் இம்மாநில மக்களுக்கு பெரும்பணி ஆற்றும் முயற்சியில் வெற்றிபெற வேண்டும் என வாழ்த்துகிறேன். அதே வேளையில், தமிழகத்தின் வாக்காளர் பெருமக்கள் அதிக அளவில் திரண்டு வந்து ஜனநாயக நெறிமுறைகளைக் கட்டிக்காத்து சுதந்திரமாகவும், நியாயமான முறையிலும் சட்டமன்றத் தேர்தல் நடப்பதற்கு ஒத்துழைத்துள்ளதை எண்ணிப் பெருமிதம் கொள்கிறேன்.

2. இந்தத் தேர்தலில் மக்களின் பேராதரவுடன் மகத்தான வெற்றியைப் பெற்று மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதல்வராக பதவி ஏற்றுள்ள

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சரித்திரப் புகழ்மிக்க வெற்றியை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றதன் மூலம் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையை பெற்றுள்ள தலைவராக அவர் விளங்குகிறார் என்பது தெளிவாகியுள்ளது. அவருடைய ஆழ்ந்த சிந்தனையாலும், அறிவாற்றலாலும் இம்மாநிலத்தை மீண்டும் சிறப்பான வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்று நாட்டிலேயே முதன்மையான மாநிலமாகத் திகழச் செய்வார் என உறுதியாக நம்புகிறேன்.

**3.** ஏழை எளிய மற்றும் ஆதரவற்ற மக்களின் நலனையே முதன்மையாகக் கொண்டு செயல்பட்ட பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோருடைய கொள்கையை இந்த அரசு பின்பற்றி வருகிறது. மாண்புமிகு முதல்வர் தலைமையில் அமைந்துள்ள இந்தப் புதிய அரசும் ஏழைகளின் நலனையே முன்னிலைப்படுத்தி செயல்படும். ஏழை எளிய மக்களுக்கு நேரடியாக பயன் தரக்கூடிய மக்கள் நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அதே நேரத்தில், இந்த அரசு

தொலைநோக்குப் பார்வையுடன் வளர்ச்சித் திட்டங்களுக்கும், கட்டமைப்புகளை உருவாக்கும் திட்டங்களுக்கும் அதே முக்கியத்துவத்தை அளித்து தமிழகத்தை வளமான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும்.

4. பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ள கடினமான தருணத்தில் இந்த அரசு பொறுப்பேற்றுள்ளதால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதையும், நிர்வாகத்தை செம்மையாக்குவதையும் தனது முதன்மையானப் பணியாக இந்த அரசு கருதுகிறது. சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் தமிழகம் சிறப்பான மாநிலம் என்ற பெயர் பெற்றிருந்தாலும், கடந்த சில ஆண்டுகளாக சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளால் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அரசு அமைந்தபோதெல்லாம் சமூக விரோதிகள் மீதும், தீவிரவாதிகள் மீதும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து தமிழகத்தை அமைதிப் பூங்காவாக திகழச் செய்துள்ளார். எனவே, இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை கடுமையாக மேற்கொண்டு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி

மக்கள் அச்சமின்றி அமைதியான வாழ்க்கையை நடத்த வழிவகுக்கும். கடந்த ஆட்சியில் சட்டவிரோதமான முறையில் வலுக்கட்டாயமாக பயமுறுத்தி பலருடைய சொத்துக்கள் பறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய சொத்துக்கள் மீட்கப்பட்டு உரிய நபர்களுக்கு மீண்டும் வழங்க ஏதுவாக புதிய சட்டம் இயற்றப்படும். இந்த அரசு காவல் துறையில் உள்ள காவலர்களின் எண்ணிக்கையை வேண்டிய அளவில் உயர்த்தி, துறையை வலுப்படுத்தி, நவீன உபகரணங்கள் வழங்கி அவர்கள் திறம்பட செயல்பட உரிய பயிற்சிகளை அளிக்கும். காவல் துறை குற்றங்களைக் குறைப்பதற்கு கடுமையான முயற்சிகள் எடுப்பதோடு மின் ஆளுமை முறைகளைப் புகுத்தி **குற்றம் மற்றும் குற்றவாளிகள் கண்காணிப்புத் திட்டம்** (Crime and Criminal Tracking Network System) போன்றவற்றை விரைவில் செயலாக்கத்திற்குக் கொண்டுவந்து பொதுமக்களுடன் நட்புடன் சிறப்பான முறையில் செயல்பட வழிவகை செய்யும்.

5. தமிழ் மொழியின் தொன்மையையும், பெருமையையும் மற்ற மொழியினரும் உணர்ந்து போற்றத் தக்க வகையில் திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் கவிதைகள் மற்றும் புகழ் பெற்ற தமிழ் நூல்களை ஆங்கிலம்,

சீன, அரேபிய மற்றும் உலகில் அதிகம் பேசப்படும் ஏனைய மொழிகளிலும், மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு இணைய தளத்தில் இடம் பெறச் செய்து, நமது தமிழ் மொழியின் பெருமை உலகமெல்லாம் பரவ வழிவகை செய்யப்படும். கணினி வழித் தமிழ் வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் தனித் தன்மை இழந்த தமிழ் பல்கலைக்கழகம் மற்றும் அதன் தொடர்புடைய நிறுவனங்களை மீட்டெடுக்க இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். தமிழ் மொழியை இந்திய ஆட்சிமொழிகளுள் ஒன்றாக ஆக்கவும், நீதிமன்றங்களில் தமிழைப் பயன்படுத்தவும் மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்துகிறது.

**6.** இம்மாநிலத்தில் சட்ட மேலவை ஒரு தேவையற்ற அமைப்பாகக் கருதப்பட்டதால் **1.11.1986** அன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கலைக்கப்பட்டது. எனவே, மீண்டும் சட்ட மேலவையைக் கொண்டுவரத் தேவையில்லை என இந்த அரசு கருதுகிறது. சட்டப் பேரவையில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு ஒரு இறுதி முடிவு எடுக்கப்படும்.

7. ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்ற தலைமைச் செயலகக் கட்டடம் முழுமையாக கட்டி முடிக்கப்படுவதற்கு முன்பே மார்ச் 2010–ல் திறந்துவைக்கப்பட்டது. அந்தப் புதிய கட்டடத்தில் போதிய வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. அடிப்படை வசதிகள் கூட அங்கு இல்லை. கட்டுமானப் பணிகள் முழுமை பெறுவதற்கு முன்பே அவசரஅவசரமாக ஒரு சில துறைகளும், முதலமைச்சர் மற்றும் அனைத்து அமைச்சர்களின் அலுவலகங்களும் அந்தப் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டன. ஆறு செயலகத் துறைகள் மட்டுமே புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட நிலையில் மீதமுள்ள 29 துறைகள் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பழைய கட்டடத்திலேயே இயங்கி வந்தன. அமைச்சர்களின் அலுவலகங்கள் மட்டும் புதிய தலைமைச் செயலகக் கட்டடத்திற்கு மாற்றப்பட்ட நிலையில், தொடர்புடைய துறை அலுவலகங்கள் தொடர்ந்து புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள பழைய தலைமைச் செயலகக் கட்டடத்திலேயே செயல்பட்டு வந்தன. இவ்வாறு துறைகளை ஒரு இடத்திலும், அமைச்சர்களின் அலுவலகங்கள் மற்றும் ஒரு சில துறைகளை மட்டும் புதிய தலைமைச் செயலகக் கட்டடத்திற்கு மாற்றியது தேவையற்ற

நிர்வாகப் பிரச்சனைகளை ஏற்படுத்தியதுடன் பொதுமக்களுக்கும் இடையூறாக அமைந்துள்ளதால், இந்த அரசு புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள தலைமைச் செயலகக் கட்டடத்திலேயே தனது நிர்வாகப் பணிகளைத் தொடர முடிவு செய்துள்ளது. **புதிய தலைமைச் செயலகக் கட்டடப் பணிகளுக்கு கூடுதலான மற்றும் பயனற்ற செலவு, காலதாமதம், தரமற்ற கட்டுமானப் பணிகள் போன்ற குறைபாடுகள் உள்ளதாக பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதுகுறித்து விசாரணை செய்ய ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு விசாரணைக் குழு அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இந்த விசாரணை முறையாக நடைபெற ஏதுவாக புதிய தலைமைச் செயலக கட்டுமானப் பணிகள் நிறுத்தி வைக்கப்படும்.**

**8.** சிறப்பான நிர்வாகத்தை வழங்கி, அனைத்து முதலீட்டாளர்களும் விரும்பி வந்து முதலீடு செய்யும் மாநிலமாக தமிழகத்தை மாற்றுவதே இந்த அரசின் கொள்கையாகும். இந்த நோக்கத்தை அடைய லஞ்ச ஊழல் அற்ற நிலைமையை உருவாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அரசின் சேவைகள் அனைத்தும் சிறப்பான முறையில் மக்களைச் சென்றடைய மின் ஆளுமை

முயற்சிகளும், பணி சார்ந்த நிர்வாக மறு சீரமைப்பு (process re-engineering) முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து மக்கள் நலத் திட்டங்களும் அங்க அடையாளத்தை அடிப்படையாகக் கொண்ட அடையாள அட்டைத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு ஊழலுக்கு இடம் தராமல் திட்டத்தின் பயன் மக்களை முழுமையாகச் சென்றடைய வழிவகை செய்யப்படும். **இதன் பொருட்டு ஒரு முதல் முயற்சியாக முதியோர் ஒய்வூதியத் திட்டம் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் மாதந்தோறும் வழங்கப்படும் ஒய்வூதியத் தொகையை, பயனாளிகள் பெயரில் வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு அதன் மூலம் வங்கி சேவையாளர் உதவியுடன் பயனாளிகளுக்கு நேரடியாக வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் புதிய திட்டம் வரும் 2011 செப்டம்பர் முதல் நாள் முதல் செயல்படுத்தப்படும்.**

9. **இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியை இலவசமாக வழங்க ஆணையிட்டுள்ளது.** ஏழை எளிய மக்களின் துயரத்தைப் போக்க இந்த அரசு

எடுத்துவரும் உறுதியான முயற்சிகளுக்கு இது ஓர் உதாரணமாகும். பொது விநியோகத் திட்டத்தில் தொழில்நுட்ப உத்திகள் புகுத்தப்பட்டு குடும்ப அட்டைகள் பராமரிப்பு, பொருட்களின் நகர்வு, அத்தியாவசியப் பொருட்களின் ஒதுக்கீடு, விநியோகங்கள் போன்றவற்றைக் கண்காணித்தல், கடத்தலைத் தடுத்தல் ஆகிய பணிகளை இந்த அரசு செவ்வனே செய்யும். **விலைவாசியைக் கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாக பொது விநியோகத் திட்டத்தை வலுப்படுத்துவதுடன் பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தை விற்பனையில் ஈடுபடுவோர் மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கையை எடுக்கும். ரூபாய் 50 கோடி ஒதுக்கீட்டில் 'விலை கட்டுப்பாட்டு நிதி' உடனடியாக ஏற்படுத்தப்பட்டு வட்டியில்லாக் கடனாக கூட்டுறவு அமைப்புகளுக்கு வழங்கி அத்தியாவசியப் பொருட்களின் விலை அளவுக்கு அதிகமாக உயரும்போது அத்தகைய பொருட்களை உற்பத்தி மையங்களில் நேரடியாக வாங்கி அடக்க விலையிலேயே நுகர்வோருக்கு விற்பனை செய்ய வழிவகை செய்யப்படும். நீண்டகாலத் திட்டமாக உற்பத்தி குறைவாக உள்ள அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரித்து அதன்**

**மூலம் தேவை மற்றும் வழங்கலுக்கு இடையே உள்ள இடைவெளியை நீக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

**10.** மீனவர்களின் நலனை பேணிக்காக்கும் பணியை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தன் இதயத்தில் இருத்தி செயல்பட்டு வருகிறார். **தேர்தல் வாக்குறுதியில் கூறியுள்ளபடி மீன்பிடிக்க தடைசெய்யப்பட்ட காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை மாதமொன்றுக்கு 1,000 ரூபாயாக இருந்ததை ரூபாய் 2,000 ஆக உயர்த்தி வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது. அதேபோல் முதியோர் ஓய்வூதியம் மற்றும் இதர சமூகப்பாதுகாப்புத் திட்டங்களில் தற்போது வழங்கப்பட்டுவரும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூபாய் 500 என்பது இரட்டிப்பாக்கப்பட்டு மாதம் ரூபாய் 1,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் மேலும் ஒரு தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு ஏழைகளின் நலன் பேணப்பட்டுள்ளது.**

**11.** நாட்டின் பொருளாதார உற்பத்தி மதிப்பில் மகாராஷ்டிரம் மற்றும் உத்திரப்பிரதேச மாநிலங்களுக்கு

அடுத்தபடியாக மூன்றாவது அதிக பங்களிப்பு தரும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. விவசாயம் மற்றும் உற்பத்தித் துறைகளின் வளர்ச்சி குறைந்ததால் 2008-2009 ஆண்டிலிருந்து தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி வளர்ச்சி குறையத் தொடங்கியது. வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய துறை சார்ந்த திட்டமிட்ட உத்திகள் பயன்படுத்தபடாமையே இந்த தேக்க நிலைக்கு காரணமாகும். எனவே வருவாய் வளர்ச்சியை ஊக்குவித்து, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தக் கூடிய துறை சார்ந்த நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு துரித வளர்ச்சியை எல்லோருக்கும் பயனளிக்கத்தக்க வகையில் ஏற்படுத்தி ஒரு நல்ல சூழலை உருவாக்குவதே இந்த அரசின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைய மாநிலத்தின் மொத்த வளர்ச்சி 10 விழுக்காட்டிற்கும் மேல் தொடர்ந்து இருக்கக்கூடிய வகையில் ஒரு ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டம் தயாரித்து செயல்படுத்தப்பட வேண்டும். **எனவே, இந்த அரசு ‘தமிழ்நாடு 2025 தொலைநோக்கு பார்வைத் திட்டம்’ ஒன்றைத் தயாரித்து வளர்ச்சிக்குத் தடையாக உள்ள காரணிகளைக் கண்டறிந்து களைவதுடன், வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடிய முக்கிய கட்டமைப்புத் திட்டங்களைக்**

**கண்டறிந்து முன்னுரிமையில் செயல்படுத்தி தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் மீண்டும் கொண்டு செல்ல பாடுபடும்.**

**12.** பொருளாதார வளர்ச்சியின் பயன் அனைவரையும் சென்றடைய வேண்டுமெனில் முதன்மை நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை துறைகள் ஒருசேர சேர்ந்து வளர்ச்சி அடைய வேண்டும். ஆனால் முதன்மைத் துறையான வேளாண்மையில் 11 ஆவது திட்டக் காலம் தொடங்கி, 2007-2010 வரை, ஒட்டுமொத்த வளர்ச்சி (cumulative growth) எதிர்மறையாக 1.18 சதவீதம் என குறைந்துள்ளது. இதனால் 11 ஆவது திட்ட காலத்தில் முதன்மைத் துறையில் 4 விழுக்காடு வளர்ச்சி என்ற குறிக்கோளை எட்ட இயலாத நிலை உள்ளது. எனவே, இந்த அரசு முதன்மை துறையான விவசாயம், கால்நடைத் துறை, மீனளம் போன்றவற்றின் வளர்ச்சியில் சிறப்பு கவனம் செலுத்தும். விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் தமிழ்நாட்டிலுள்ள 75 இலட்சம் சிறு குறு விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் வகையிலும் பண்ணைசார் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

13. வேளாண் உற்பத்தித் திறனை பெருக்கக் கூடிய வகையில் நெல், பயறு, கரும்பு, பருத்தி போன்ற பயிர்களுக்கான உற்பத்தி வழிமுறைகள் தனித்தனியே திட்டமிடப்பட்டு வேளாண் துறைக்கு புத்துயிர் அளிக்கப்படும். துல்லிய பண்ணை முறை, நுண்ணீர் பாசனத் திட்டங்கள் முதலியவை பெரிய அளவில் செயல்முறைக்குக் கொண்டு வரப்படும். தேவையான அளவு உணவு உற்பத்தியை உறுதி செய்யும் அதே வேளையில் குறைந்த மதிப்புள்ள பயிர்களுக்குப் பதிலாக அதிக வருவாய் தரும் பயிர்களைப் பயிரிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வேளாண் கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில் விவசாயிகள் பங்களிப்புடன் விவசாய பொருட்கள் பதப்படுத்தும் தொழிற்சாலைகள், சந்தை வசதி, சேமிப்புக் கிட்டங்கிகள் மற்றும் குளிர் சாதன வசதிகளை உருவாக்குதல் போன்ற பணிகளையும் இந்த அரசு தீவிரமாக மேற்கொள்ளும்.

14. வேளாண்மையில் ஒரு நீடித்த நிலையான வளர்ச்சியை எய்த பாசனக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவது மிக முக்கியமான தேவையாகும். இந்த அரசு மாநில நதிகளை இணைக்கும் திட்டத்தை செயல்படுத்தி பாசன ஆதாரத்தைப் பெருக்கும். இதனால்

வெள்ள பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதுடன், இத்தகைய கால்வாய்கள் நீர்வழிப் போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்படும்.

**15. இந்த ஆண்டு மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு பொதுவாகத் திறக்கப்படும் ஜூன் 12 ஆம் தேதிக்கு பதிலாக ஜூன் 6 ஆம் தேதி அன்றே தண்ணீர் திறந்து விடப்படும். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்பு குறித்த காலத்திற்கு முன்பே பாசனத்திற்கு நீர் திறந்து விடுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் காவிரி டெல்டா பகுதி வேளாண் பெருமக்கள் விவசாயப் பணிகளை உரிய காலத்தில் மகிழ்ச்சியுடன் தொடங்க இயலும்.**

**16.** வறுமையை முழுமையாக அகற்றுவதே இந்த அரசின் கொள்கையாகும். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி இல்லையெனில் பொருளாதார வளர்ச்சியினால் மட்டுமே வறுமையை முழுமையாக அகற்றி விட முடியாது என்ற உண்மையை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே பல்வேறு திட்டங்களையும் ஒருங்கிணைத்து, அவற்றின் பயன் ஏழைகளின் குடும்ப அளவில் பொருளாதார

மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்படுத்தப்படும். இதனால் ஏற்படும் சமூகப் பொருளாதார மாற்றங்களால் அக்குடும்பங்கள் வறுமையின் பிடியிலிருந்து விடுபடும் வரை கண்காணித்து உதவிகள் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**17.** மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவு சுமூகமாக இருக்கும் வகையில் இந்த அரசு செயல்படும். மாநில அரசின் தன்னாட்சி நிதி அதிகாரம் பாதிக்காத வகையில் சரக்கு மற்றும் சேவை வரியை உள்ளடக்கிய மறைமுக வரி முறைகளில் கொண்டுவரப்படும் வரிச் சீர்திருத்தத்தை இந்த அரசு வரவேற்கும். விற்பனை வரி மட்டுமே மாநிலத்திற்கு முக்கிய வருவாய் ஆதாரமாக உள்ள நிலையில், மாநில அரசுகளின் வருவாயை பாதிக்காத சரக்கு மற்றும் சேவை வரி முறையை பின்பற்ற வேண்டும் என மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும்.

**18.** மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ப் பிரச்சனைகள் குறித்து பேச்சுவார்த்தை மூலம் சுமூகத் தீர்வு காணவே இந்த அரசு விரும்புகிறது. இதற்கு வாய்ப்பு கிட்டாத சூழ்நிலையில் சட்டப்படியான நடவடிக்கைகளை

எடுப்பதற்கு இந்த அரசு தயங்காது. முல்லைப் பெரியாறு மற்றும் பிற நதிநீர்ப் பிரச்சனைகள் நீதிமன்றங்களுக்குச் சென்றுவிட்ட நிலையில் ஒரு நிலையான தீர்வினை எட்ட சட்டப்படியான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். முல்லைப் பெரியாறு அணை குறித்து உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் விசாரணை விரைவில் முடிக்கப்பட்டு ஒரு நியாயமான முடிவு கிடைக்கும் என இந்த அரசு நம்புகிறது.

**19.** தமிழகத்தில் நிலவிவரும் மின் பற்றாக்குறை, அடிப்படைக் கட்டமைப்புகளில் உள்ள குறைபாடு, மனிதவளப் பற்றாக்குறை ஆகியவை தொழில் வளர்ச்சியை வெகுவாக பாதிப்பதால், நமது மாநிலத்திற்கு வரவேண்டிய தொழில் முதலீடு வேறு மாநிலங்களுக்கு செல்லும் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த அரசு முக்கிய தொழில்களான மோட்டார் வாகன உற்பத்தி, மோட்டார் வாகன உதிரி பாகங்கள், தகவல் தொழில்நுட்பம், கணினி சார்ந்த சேவைகள், ஜவுளித் துறை, தோல் பொருட்கள் சார்ந்த தொழில் துறை, பொறியியல் உபகரணங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்ய பெரிய தொழில் நிறுவனங்களை ஈர்க்க முயற்சி செய்யும். தொழில் வளர்ச்சி பெரும்பாலும் சென்னை

மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ளதால் மாநிலத்தின் பிற பகுதிகளில் தொழில் வளர்ச்சியைப் பரவலாக்க இந்த அரசு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும். கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த கப்பல் கட்டும் தொழிலுக்கான முதலீடுகளை ஈர்க்க இந்த அரசு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளும். மதுரை – அருப்புக்கோட்டை – தூத்துக்குடி பாதையை அனைத்து வசதிகளும் கொண்ட தன்னிறைவு வளர்ச்சிப் பாதையாக மாற்றி தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். **புதிதாக வளர்ச்சி பெற்று வரும் துறைகளான உயிரி தொழில்நுட்பம் (bio-technology), நானோ தொழில் நுட்பம் (Nano technology) மற்றும் மருந்தியல் (pharmaceuticals) போன்ற துறைகளை ஊக்குவிக்கும் வகையில் இந்த அரசு செயல்படும்.**

20. தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதைச் சார்ந்த சேவைகளை வழங்கும் முக்கிய மையமாக தமிழகத்தை மாற்றும் நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும். இரண்டாம் நிலை நகரங்களில் தொலை தொடர்பு பூங்காக்கள் மூலம் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தி இத்துறையின்

வளர்ச்சியை இரட்டிப்பாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கிராமப்பகுதிகளில் உள்ள வணிக வெளிப்பணி மையங்கள் (BPOs) வலுவாக்கப்பட்டு தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி பரவலாக்கப்படும். **மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தை இந்த அரசு 2011 செப்டம்பர் 15 ஆம் நாள் முதல் தொடங்கும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து +1 மற்றும் +2 மாணவர்களும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்படும். முதல் கட்டமாக 2011–2012 ஆம் ஆண்டில் 9.12 இலட்சம் மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்கப்படும்.**

**21.** முந்தைய அரசால் தொடங்கப்பட்ட அரசு கேபிள் டிவி நிறுவனம் தற்போது செயலற்ற நிலையில் உள்ளது. அரசு கேபிள் டிவி நிறுவனத்தை உயிர்ப்பித்து மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டுவந்து கேபிள் சேவையை நியாயமான கட்டணத்தில் வழங்க வேண்டும் என்று பொதுமக்களிடம் பெருத்த எதிர்பார்ப்பு உள்ளது. எனவே, **பொதுநலனைக் கருத்தில் கொண்டு இந்த**

**நிறுவனத்தை புதுப்பித்து செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதுடன் கடைக்கோடியில் உள்ள உள்ளூர் கேபிள் டிவி இயக்குபவர்கள் பாதிக்காத வகையில் தனியார் கேபிள் டிவி சேவை அரசுடமை ஆக்கப்படும்.**

**22.** மின்சாரம், சாலை வசதி, நகர்ப்புற கட்டமைப்புகள், வீட்டு வசதி ஆகிய உட்கட்டமைப்புகளில் உள்ள குறைவைப் போக்க தொடர்ந்து திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி தமிழ்நாடு நீட்டித்த பொருளாதார வளர்ச்சியைப் பெற வழிவகை செய்யப்படும். இத்தகைய பணிகளை மேற்கொள்ள கணிசமான நிதி தேவைப்படும் நிலையில் மாநில அரசிடம் உள்ள வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரத்தைக் கொண்டு மட்டும் திட்டங்களை செயல்படுத்த இயலாது. எனவே, நிதி ஆதாரத்தை திரட்டுவதுடன், முழுமையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முறையான அணுகுமுறை பின்பற்றப்படும். அரசு தனியார் தொழில் நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணியை இந்த அரசு செயல்படுத்தும்.

**23.** கடந்த ஆட்சி காலத்தில் மின் பற்றாக்குறையினால் இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த அரசு மாநிலத்தின் மின் துறையை சீரமைத்து தமிழகத்தை உபரி மின்சாரம் உள்ள மாநிலமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளும். எதிர்கால கூடுதல் தேவையை எதிர்நோக்கி நீண்ட கால மின் செயல்முறை திட்டங்கள் வகுக்கப்பட்டு தொழில் துறைகள் மற்றும் பிற துறைகளுக்கு தங்கு தடையின்றி மின்சாரம் கிடைக்க வழிவகை செய்யப்படும். மின் உற்பத்தி, பகிர்மானம், வழங்கல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்படும். மின் திருட்டைத் தடுத்து மின் இழப்பைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதுடன் தொழிற்சாலைகள், வீடுகள், விவசாயம் போன்றவற்றுக்கான மின் வழங்கிகளைத் (feeder) தனித்தனியாக அமைத்து மின்சாரம் வழங்கப்படும். தரம் மேம்படுத்தப்படும். உடனடித் தீர்வாக, சொந்த மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், காற்றாலை மின் உற்பத்தியை முழுமையாக பயன்படுத்துதல், தொழில்நுட்ப, வணிக ரீதியான இழப்பைக் குறைப்பது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒரு நம்பகத்தன்மையுள்ள மாற்று எரிபொருள் ஆதாரமாக

மரபுசாரா எரிசக்தியான காற்று, சூரிய ஒளி மற்றும் உயிரி எரிபொருள் மூலம் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும். **மரபுசாரா எரிசக்தி மூலம் மின் உற்பத்தி செய்வதற்காக தனியாக ஒரு கொள்கையை இந்த அரசு வகுக்கும்.**

**24.** தரமான சாலைகள் மற்றும் சிறப்பான இணைப்பு வசதி ஆகியவை நீடித்த பொருளாதார வளர்ச்சியைப் பெற அவசியமாகிறது. எனவே, இந்த அரசு தரமான சாலைகளை அமைத்து பயண நேரத்தைக் குறைத்து சிறப்பான போக்குவரத்தை அமைக்கப் பாடுபடும். மாநிலத்தில் உள்ள அனைத்து மாநில நெடுஞ்சாலைகளும் குறைந்த பட்சம் இருவழித் தடங்கள் கொண்டவையாகவும், மாவட்ட முக்கிய சாலைகள் இடைவழித் தடங்களாகவும் 2014 ஆம் ஆண்டுக்குள் மாற்றப்படும். 500–க்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட அனைத்து கிராமங்களுக்கும் தார் சாலைகள் அமைக்கப்படும். பிற குடியிருப்புகளுக்கு எல்லா பருவ காலத்திலும் பயன்படுத்தக் கூடிய வகையில் சாலைகள் அமைக்கப்படும். தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்ட செயலாக்கத்திற்கு உலக வங்கியிலிருந்து நிதியுதவி கோரப்படும்.

**25.** நாட்டிலேயே அதிக அளவில் நகர்புரமாக மாறியுள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. வேலை தேடி நகர்ப்புரங்களுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் சென்னை போன்ற நகரங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. ஆனால், அதற்கேற்ப அடிப்படை வசதிகள் வளர்ச்சி பெறவில்லை. **இந்த அரசு சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் குடிநீர், கழிவு நீர் சுத்திகரிப்பு, திடக் கழிவு மேலாண்மை, சாலைகள் மற்றும் தெருக்கள் மேம்பாடு போன்ற பணிகளை மேற்கொள்ள ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும். தமிழ்நாட்டின் பிற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்த ஒரு சிறப்பு நகர்ப்புர வளர்ச்சி இயக்கம் துவங்கப்படும்.**

**26.** சென்னை மற்றும் பிற நகரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல், நிர்வாகத்திற்குப் பெரும் சவாலை ஏற்படுத்தி வருகிறது. சென்னை மாநகர போக்குவரத்தில் பொதுப் போக்குவரத்தின் பங்கு தற்போது 27 சதவீதம் உள்ளது. இந்த விழுக்காடு 2026 ஆம் ஆண்டுக்குள் 46 சதவீதத்திற்கு உயர்த்தப்பட வேண்டும். எனவே, இந்த அரசு ஒரு ஒருங்கிணைந்த பன்முறை போக்குவரத்து

(Multi Modal Transport) வசதியினை சென்னை மாநகரில் ஏற்படுத்தும். தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மெட்ரோ இரயில் திட்டம் 45 கிலோமீட்டர் அளவிற்கே திட்டமிடப்பட்டுள்ளது. மூலதனச் செலவு அதிகமாக உள்ள இத்திட்டம் செயல்பாட்டுக்கு வர மிகுந்த காலமாகும். எனவே, இந்த அரசு **சென்னை மாநகருக்கு தற்போதுள்ள போக்குவரத்து முறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட மோனோ இரயில் திட்டத்தை செயல்படுத்தும். முதற்கட்டமாக 111 கிலோமீட்டருக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு படிப்படியாக 300 கிலோமீட்டர் வரை விரிவுபடுத்தப்படும். கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி போன்ற மாநகராட்சிகளிலும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மோனோ இரயில் திட்டம் செயல்படுத்த உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.**

27. கடந்த ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வந்த ஊரக வீட்டு வசதித் திட்டம் பல குறைபாடுகளுடன் உள்ளது. கட்டுமானச் செலவு இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரித்துவிட்ட நிலையில் அத்திட்டத்தில் ஒரு அலகிற்கு வழங்கப்படும் நிதியான ரூபாய் 75 ஆயிரம் மிகக் குறைந்த அளவாக உள்ளது. இதனால் ஏழை எளிய குடும்பங்கள்

கடன் சுமையில் சிக்கியுள்ளனர். இதன் காரணமாக மிக அதிக எண்ணிக்கையில் வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவில்லை. எனவே, இத்திட்டத்தினை கைவிடுவதென இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு மாற்றாக, கிராமப்புற ஏழைகள் பயன்பெறும் வகையில் '**சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்**' தொடங்கப்படும். இத்திட்டத்தில் சுமார் **300** சதுர அடி அளவில் ரூபாய் **1.80** இலட்சம் செலவில் அரசே வீடு கட்டிக் கொடுக்கும். அதே போல், நகர்ப்புர ஏழைகளின் வீட்டுவசதிக்காக மத்திய அரசு செயல்படுத்தும் திட்டங்களின் நிதியை ஒருங்கிணைத்து ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும். சென்னை நகரில் ஆற்றோரங்களில் வாழும் குடும்பங்களுக்கு பாதுகாப்பான நவீன வீடுகள் வழங்கப்படும்.

**28.** கடலோரப் பகுதிகளில் வணிக வாய்ப்புகளைப் பெருக்கத்தக்க வகையில் தமிழ்நாட்டில் நீண்ட கடற்கரை உள்ளது. இப்பகுதியில் உள்ள துறைமுகங்கள் மேம்பாடு அடைந்தால் அதனை ஒட்டி உள்ள நிலப்பகுதிகளில் வர்த்தகம் மேம்பாடு அடையும் என இந்த அரசு கருதுகிறது. எனவே, கிழக்குக் கடற்கரையை ஒட்டி உள்ள கடலூர்,

நாகப்பட்டினம் மற்றும் குளச்சல் உள்ளிட்ட சிறு துறைமுகங்கள் அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் மேம்படுத்தப்படும். இதனால் மாநிலத்தின் சரக்கு கையாளும் திறன் அதிகரிக்கும்.

**29.** பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரம் பெற்றவர்களாக பெண்களின் நிலையை உயர்த்துவதே இந்த அரசின் தலையாய நோக்கங்களுள் ஒன்றாகும். பாராளுமன்றத்தில், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு சட்ட முன்வடிவை விரைவில் கொண்டு வரவேண்டும் என இந்த அரசு வலியுறுத்துகிறது. சுயஉதவிக் குழுக்கள் மூலம் பெண்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு தொடர்ந்து கவனம் செலுத்தி போதிய அளவு அவர்களுக்கு சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் பெறுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

**30. இந்த அரசு, அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதியன்று மகளிருக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டத்தைத் தொடங்கும். 2011–2012 ஆம் ஆண்டு சுமார் 25 இலட்சம்**

**குடும்பங்கள் இத்திட்டத்தில் பயன்பெறும். பொது விநியோகத் திட்டத்தில் அரிசி பெறத் தகுதியுடைய சுமார் 1.83 கோடி குடும்பங்களைச் சேர்ந்த மகளிர் இத்திட்டத்தினால் படிப்படியாகப் பயனடைவர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே உறுதி அளித்துள்ளபடி மீதம் உள்ள அனைத்து தேர்தல் வாக்குறுதிகளும் அடுத்த ஒன்றரை ஆண்டில் இந்த அரசால் நிறைவேற்றப்படும்.**

**31.** கிராமப்புரங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பறை வசதி, **24** மணிநேர மருத்துவ வசதி, தரமான கல்வி, அனைத்து பருவ காலங்களிலும் பயன்படுத்தக்கூடிய சாலைகள் போன்ற வசதிகளை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இந்த அரசு பாடுபடும். நகர்ப்புரங்களுக்கு இணையான வசதிகள் கிராமப்புரங்களில் ஏற்படுத்தப்படும். சோதனை அடிப்படையில் கிராமப்புரங்களில் சூரிய எரிசக்தியைப் பயன்படுத்தும் தெருவிளக்குகள் அமைக்க இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும். சூரிய எரிசக்தியைப் பயன்படுத்துவதில் ஆரம்பகட்ட மூலதனச் செலவு தற்பொழுது அதிகமாக இருந்தாலும் வருங்காலத்தில் தொழில்நுட்ப மேம்பாடு, பயன்பாட்டு அளவில் உயர்வு ஆகியவற்றால் ஒரு

அலகுக்கான மூலதனச் செலவு குறைந்து தெருவிளக்குகள் மற்றும் பிற சமுதாய எரிசக்தி தேவைகளுக்கு இது ஒரு நிரந்தரமான மாற்று தீர்வாக அமையும் என இந்த அரசு கருதுகிறது.

**32.** தமிழ்நாட்டில் கலைநயமிக்க கட்டடங்கள், புராதனச் சின்னங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளதால் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த அதிக வாய்ப்புகள் உள்ளன. **தமிழகத்தை அடுத்த ஐந்தாண்டுகளில் 60 இலட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும், 40 இலட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கக்கூடிய வகையில் சர்வதேச சுற்றுலா மையமாக மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்**.

**33.** சுற்றுச் சூழலைப் பாதுகாக்க இந்த அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளும். கிராமப்புரங்களையும், நகர்ப்புரங்களையும் தூய்மைப்படுத்த ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மக்கிப் போகாத ப்ளாஸ்டிக் பொருட்களை மக்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு சிறப்பு தகவல் கல்வித் திட்டம் தொடங்கப்படும்.

**முதன்முறையாகவோ அல்லது மறு சுழற்சி மூலமோ தயாரிக்கப்படும் 60 மைக்ரான் மற்றும் 8x12" அளவுக்குக் குறைவான பாலிதின் பைகளுக்கு தடை விதிக்கப்படும். இந்திய தர நிர்ணயக் கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்குட்பட்டு ப்ளாஸ்டிக் பொருட்களுக்கான மறுசுழற்சிமுறை கடுமையாக ஒழுங்கு முறைபடுத்தப்படும்.**

**34.** அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய தரமான மருத்துவச் சேவையை வழங்குவதே இந்த அரசின் நோக்கமாகும். தற்போதுள்ள மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மக்களின் தேவைகளை நிறைவு செய்யத்தக்க வகையில் முழுமையாக இல்லை என்பதால், இத்திட்டம் கைவிடப்படும். **அனைவருக்கும் தரமான மருத்துவச் சேவை வழங்கும் நோக்கத்தை எட்டக்கூடிய வகையில் ஒரு புதிய பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தி அனைவரும் மருத்துவ வசதி பெறுவதை உறுதி செய்யும்.** ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த இந்த அரசு சிறப்பு கவனம் செலுத்தும். நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏழை மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் **24** மணி நேரம் செயல்படும் மையங்களாக

மாற்றியமைக்கப்படும். மருத்துவச் சுற்றுலாவை ஒரு பெரிய அளவில் ஊக்குவிக்க ஆராய்ச்சி வசதிகளுடன் கூடிய மருத்துவ நகரங்கள் தனியார் பங்களிப்புடன் உருவாக்கப்படும். மருத்துவத் துறையில் தனியார் மூலதனத்தை அதிகரிக்கும் வகையில் தெளிவான வழிமுறைகளை இந்த அரசு வகுக்கும்.

**35.** தரமான பள்ளிக் கல்வியை இலவசமாக அனைவருக்கும் வழங்குவது இந்த அரசின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகும். முக்கிய கல்வி சார்ந்த குறியீடுகளான பள்ளிச் சேர்ப்பு விகிதத்தை அதிகரித்தல், இடை நிற்றலைக் குறைத்தல் போன்றவற்றுடன் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்தவும் இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும். **சமச்சீர் கல்வி என்ற பெயரில் பள்ளிக் கல்வியின் தரத்தைக் குறைத்து அதனால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் நிலை ஏற்படுவதை இந்த அரசு விரும்பவில்லை. பள்ளிக் கல்விமுறை மாணவர்களின் செயல்முறை அறிவாற்றலையும், ஆக்கப்பூர்வமான சிந்தனைத் திறனையும் மேம்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். தமிழ்நாட்டு மாணவர்கள் பிற மாணவர்களைக் காட்டிலும் சிறந்து விளங்கும் வகையில் உருவாக்க**

**இந்தக் கல்வி முறை வகை செய்யவேண்டும். ஆனால், தற்போது தயாரிக்கப்பட்டுள்ள பொது பாடத்திட்டம் இந்த நோக்கத்தை எய்த போதுமானதாக இல்லை. எனவே சமச்சீர் கல்விக்கான பாடத்திட்டங்கள் மறு ஆய்வு செய்யப்படும். ஒரு வல்லுநர் குழுஅமைக்கப்பட்டு இது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைகளை அளிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

**36.** அதிக எண்ணிக்கையில் உயர்கல்விக்கானப் பல்கலைக் கழகங்களைத் தொடங்கிவிட்டால் மட்டும் கல்வியின் தரம் உயர்ந்துவிடாது என இந்த அரசு கருதுகிறது. **அண்ணா பல்கலைக்கழகங்களை மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் தொடங்கியதால் சென்னை அண்ணா பல்கலைக்கழகம் வலுவிழந்துவிட்டது. இதனால் கல்விச் சேவையின் தரம் உயராமல் சுயமாக செயல்பட இயலாத பல நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தை மீண்டும் பழைய நிலைக்கே கொண்டுவர இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இந்த அரசு பல்கலைக் கழகங்களைச் சீரமைத்து உலகத் தரம் மிக்க நிறுவனங்களாக மாற்றியமைக்க சிறப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தும்.**

**37.** தமிழ்நாட்டில் கட்டுப்பாட்டுடன் திறம்படப் பணியாற்றக்கூடிய மனித வளம் உள்ளது. கல்வியறிவு பெற்றும் வேலைவாய்ப்பை பெறக்கூடிய திறன் இல்லாத படித்த இளைஞர்கள் அதிக அளவில் உள்ளனர். இந்த அரசு தொழில் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து வேலைவாய்ப்புக்கான திறன் வளர்ப்புப் பயிற்சியை பெரிய அளவில் மேற்கொண்டு மனித வளத்தில் தற்போதுள்ள இடைவெளியைக் குறைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**38.** அரசு அலுவலர்கள் சுதந்திரமாகவும், ஊக்கமுடனும் செயல்பட உரிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்தால்தான் அரசின் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்பட இயலும் என இந்த அரசு கருதுகிறது. அரசு அலுவலர்கள் ஊக்கமுடன் செயல்பட்டு புதிய அரசின் நல்ல முயற்சிகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பார்கள் என உறுதியாக நம்புகிறேன். **பெண் அரசு அலுவலர்களின் நலன் பேண, மகப்பேறு மருத்துவ விடுப்பிற்கு இதுவரை அளிக்கப்பட்ட மூன்று மாதம் என்பதை ஆறு மாதங்களாக உயர்த்தி தனது தேர்தல் வாக்குறுதியை இந்த அரசு நிறைவேற்றியுள்ளது.**

**39.** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு இந்த அரசு தனி கவனம் செலுத்தும். திறன்வளர் பயிற்சி, தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் மூலம் வளர்ந்து வரும் தொலைத் தொடர்புத் துறை போன்றவற்றில் அவர்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்க வழிவகை செய்யப்படும். ஆதிதிராவிட மாணவர்களின் திறன் மேம்பட, அவர்கள் விடுதிகளில் தங்கிப் பயிலும்போது சிறப்பான சூழ்நிலைகள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும். இந்த அரசு ஆதிதிராவிட பழங்குடியின மாணவர்கள் தங்கிப் பயிலும் விடுதிகளின் வசதியை ஓராண்டிற்குள் மேம்படுத்த சிறப்பு நிதி உதவியை அளிக்கும்.

**40.** இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ள முகாம்கள் சீரமைக்கப்பட்டு அவர்கள் தமிழகத்திலேயே கௌரவமாக வாழத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இந்த முகாம்களில் தரமான இருப்பிடம், குடிநீர், சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவை செய்து தரப்படும். இலங்கை தமிழ் அகதிகளின் குழந்தைகள் கல்வி பயிலத் தேவையான உதவிகளை வழங்குவதுடன் அவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கான

சிறப்பு வேலை வாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் அனைத்து நலத் திட்டங்களும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்படும். இலங்கைப் போரினால் இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் மாண்டு போன நிலையில் மீதமுள்ள இலங்கைத் தமிழர்களும் தங்கள் சொந்த நாட்டிலேயே அடிமைகள் போல் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்கள் அவர்கள் சொந்தப் பகுதிகளிலேயே மறுவாழ்வு பெறுவதற்கான உடனடி நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வலியுறுத்துமாறு மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொள்கிறது.

**41.** இந்த அரசின் கொள்கைகளையும் முன்னுரிமைகளையும் இங்கு சுட்டிக்காட்டியுள்ளேன். மகத்தான வெற்றி பெற்று பொறுப்பேற்றுள்ள இந்த அரசிடமிருந்து பொது மக்களின் எதிர்பார்ப்பு மிக அதிகமாக உள்ளது. மக்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆற்றல் வாய்ந்த தலைமையால் ஒரு சிறப்பான நிர்வாகத்தை மக்களுக்கு வழங்கமுடியும் என உறுதியாக நம்புகிறேன்.

**42.** இம்மாமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள் மக்களாட்சியின் மாண்புகளைக் கட்டிக் காக்கும் வகையில் ஆக்கப்பூர்வமாக அமைந்து மக்களின் நலனை மேம்படுத்தக் கூடிய நல்ல பல கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

**43.** உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு உரையை நிறைவு செய்கிறேன்.

**நன்றி**

**வணக்கம்**

**ஜெய்ஹிந்த்**